
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1248**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




– வாழ்வோம்

---

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

**166**

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த டி.கே.பொன்னுவேலு அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

## டி.கே.பொன்னுவேலு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முன்னோடி!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க காலகட்ட வரலாற்றில், முக்கிய களப்போராளியாகத் திகழ்ந்தவர் டி.கே.பொன்னுவேலு. மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் மிகப்பெரும் செல்வாக்கைச் செலுத்திய கழகத்தின் மாணவர் அமைப்பான ‘திராவிட மாணவர் முன்னேற்றக் கழக’த்தின் தொடக்க அமைப்பாளர். பேரறிஞர் அண்ணா அவர்களால் முன்மொழியப்பட்டு, அவருடன் நெருக்கமாகப் பயணித்துப் பணியாற்றியவர். 1955-களில் கழகத்தின் மாணவர் பிரதிநிதிகளாக இருந்த, தில்லை வில்லாளன், முரசொலி மாறன் என மூத்த முன்னோடிகளின் நெருங்கிய நண்பராகக் கழகம் வளர்த்த உடன்பிறப்பு, பொன்னுவேலு.

சுயமரியாதை இயக்கமும் திராவிடர் கழகமும் தீவிரமாகச் செயல்பட்ட காலத்தில், இளமையிலேயே பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளாலும், அண்ணாவின் பேச்சாற்றலாலும் ஈர்க்கப்பட்டு, பொதுவாழ்விற்கு வந்தவர். ஈரோட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர். சென்னையில், அரசியல் வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர்.

1949-இல் கழகம் தொடங்கப்பட்டபோது, கழகத்தின் தொடக்ககால உறுப்பினராகப் பதிவுசெய்துகொண்டவர். சென்னை சட்டக் கல்லூரியில் பயிலத் தொடங்கிய காலத்தில் இருந்து, சென்னை மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதில் தீவிரமாகப் பணியாற்றினார்.

### முதல் மாணவர் அமைப்பாளர்

1950-ஆம் ஆண்டு முதல் 1960-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற கட்சியின் மாநில, மாவட்ட மாநாடுகளை முன்னின்று ஒருங்கிணைத்தவர்களில் இவரும் ஒருவர். கழகத்தின் திருப்புமுனை மாநாடான 1956-ஆம் ஆண்டு திருச்சி மாநாட்டில் முக்கியப் பொறுப்புகளை ஏற்று நடத்தியவர்.

கழகத்தின் மாணவர் அணிக்கு முன்னோடி அமைப்பாகத் திகழ்ந்த, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு, 1955-ஆம் ஆண்டில், சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்றபோது, மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தவர், டி.கே.பொன்னுவேலு. அந்த மாநாடுதான், ‘கலைஞரின் மனச்சாட்சி’ முரசொலி மாறன் அவர்களின் அரசியல் நுழைவின்- கட்சி நுழைவின் முதற்படியாகும் எனக் குறிப்பிடுகிறார் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு. மாநாட்டின் பொருளாளர் மாறன் அவர்கள்தான். தமிழ்நாடு முழுவதிலும் இருந்து கல்லூரி, பல்கலைக்கழகங்களில் இருந்தும் மாணவர்கள் கட்டணம் செலுத்தி பங்குபெற்ற அந்த மாநாட்டில், மாணவர் கழகத்தின் மாநில அமைப்பாளராக டி.கே.பொன்னுவேலு அவர்களை அறிவித்தார், பேரறிஞர் அண்ணா.

பொன்னுவேலு அவர்களின் தலைமையிலான குழு, தமிழ்நாடு முழுவதும், கழகம் செயல்படாத இடங்களில், மாணவர் கழகங்களை உருவாக்கவும், அவற்றை தலைமைக் கழகத்துடன் இணைக்கவும் பெரும் பணிகளைச் செய்தது. பொன்னுவேலு அவர்களின் பங்கு, மாணவர் இயக்கத்தில் மட்டுமல்லாமல், கழகத்தை வளர்க்கவும், பின்னாட்களில் கழகத்தின் சட்டக் குழு வலுவாக இயங்கவும் அடித்தளமாக இருந்துள்ளது.

ஓவியம் : ரவி பேலட்



### கருப்புக்கொடி போராட்டம்

1957-ஆம் ஆண்டில், தந்தை பெரியார் குறித்து பிரதமர் நேரு தகாத வார்த்தை கூறியதற்கு எதிராக, சென்னை வருகைதந்த நேருவுக்குக் கருப்புக்கொடி போராட்டத்தை நடத்தியது கழகம். அந்த ஆர்ப்பாட்டத்துக்கு அன்றைய அரசு தடை போட்ட நிலையில், தடையை மீறி கழகத்தினர் அலை அலையாகத் திரண்டனர். ஜனவரி 3-ஆம் தேதி பொதுக் கூட்டம் தடைசெய்யட்ட நிலையில், அடுத்த நாள் தலைமை நிலையமான அறிவகத்தில் இருந்த டி.கே.பொன்னுவேலு, தில்லை வில்லாளன் உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டதை, ‘தி.மு.க. வரலாறு’ நூலில் பதிவு செய்துள்ளார், கழக முன்னோடி சிட்டிபாபு.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு முழுவதும் மேற்கொண்ட சுற்றுப்பயணங்கள் மற்றும் மாநாடுகளின் பயணக்குறிப்புகளில் பொன்னுவேலு அவர்களின் பெயர் இடம்பெற்றுள்ளது. ஆரம்ப காலத்திலிருந்தே பேரறிஞர் அண்ணா மற்றும் ஈ.வி.கே.சம்பத் ஆகியோருடன் இணைந்து தீவிரமாகப் பணியாற்றியவர். அதனால் 1961-ஆம் ஆண்டு, சம்பத் அவர்கள் கழகத்தில் இருந்து வெளியேறும் சூழலில், டி.கே.பொன்னுவேலு அதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் இறங்கியவர். அதற்காக, கழகத்தின் பொதுக் குழுவில் வாதங்கள் வைத்தவர். 1960-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 அன்று, சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இவருக்கு சுயமரியாதைத் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத்திருமணத்தில் அக்காலகட்டத்தின் முக்கியத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

> “தொடர்ச்சியாக இளைஞர்களுக்கு அரசியல் வழிகாட்டியாகத் திகழ்ந்து வந்தார். கழகத்தின் 75 ஆண்டுகள் பயணத்தில் அவரது வரலாறு அழிக்க முடியாத பக்கமாகும்.”

### கடுங்காவல் சிறைகள்

1962-ஆம் ஆண்டு, விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டத்தில், வேலூரில் பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று சிறைப்பட்டுள்ளார்.

1963-ஆம் ஆண்டு, இந்தித் திணிப்புக்கு எதிராக நவம்பர் மாதத்தில் கழகம் அறிவித்த சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில், சென்னையில் பேரறிஞர் அண்ணாவுடன் இணைந்து எரிப்பதற்கான ஐவர் அணியில் இடம் பெற்றவர். பேரறிஞர் அண்ணா, டி.கே.பொன்னுவேலு, வி.வெங்கா, டி.எம்.பார்த்தசாரதி, கே.பி.சுந்தரம் ஆகியோர் கொண்ட அந்தக் குழு கைதுசெய்யப்பட்டதும், சைதாப்பேட்டை சிறையில் சாதாரண வகுப்பில் அடைக்கப்பட்டார் அண்ணா. அண்ணாவுடன் கைதான மற்றவர்கள் வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு, வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். அங்கு பல இடங்களில் இருந்து கைதாகிவந்திருந்த கழகத்தினர், உடல்நிலை மற்றும் உணவுத் தேவைகளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தவர்.

“அறப்போரில் ஈடுபட்டு, இங்கு உள்ள தோழர்களில் இருவருக்கு உடல் நலமில்லை - சிறையில் உள்ள மருத்துவமனையில் உள்ளனர். அவர்களைப் பொன்னுவேல் பார்த்து வரும் வாய்ப்பு கிடைத்ததால், செய்தி அறிந்துகொள்ள முடிந்தது.”

“பொன்னுவேல், சமையல் காரியத்தைக் கவனித்துக் கொண்டார்; எனக்கும் மற்றவர்களுக்கும் சாப்பாட்டின் வகை பற்றிய எண்ணமே எழவில்லை” என பொன்னுவேலு அவர்களின் பொறுப்புணர்வை, 1964-ஆம் ஆண்டு டிசம்பரில் எழுதிய ‘தம்பிக்கு’ கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் பேரறிஞர் அண்ணா.

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், தீவிர அரசியல் ஈடுபாட்டைக் குறைத்துக்கொண்ட பொன்னுவேலு அவர்கள், தொடர்ச்சியாக இளைஞர்களுக்கு அரசியல் வழிகாட்டியாகத் திகழ்ந்துவந்தார். கழகத்தின் 75 ஆண்டுகள் பயணத்தில் அவரது வரலாறு அழிக்க முடியாத பக்கமாகும். தலைமுறைகள் பல மாறினாலும் கழகத்தின் வேர்களாக நின்றோர் வழிகாட்டியாகத் திகழ்வர்.

...துடிக்கும்

---

## கல்விச்சூழலைச் சிதைக்காதீர்!

முதலமைச்சர் விஜய் பிறந்தநாள் கொண்டாட்டம் என்கிற பெயரில், அவரது கட்சியினர் கல்விக்கூடங்களில் அத்துமீறுவது தொடர்கதையாகிவருகிறது. மாணவர்களிடம் விஜய் பெயரைச் சொல்லி ‘வாழ்க’ என முழக்கமிடச் செய்வது, அவர் நடித்த திரைப்படப் பாடல்களைப் பாடவைப்பது, பள்ளிகளில் ஆய்வு என்ற பெயரில் ‘ரீல்ஸ்’ எடுப்பது என கல்விக்கூடங்களின் மாண்பைச் சீர்குலைத்துவருகிறார்கள். பிரச்சாரத்தின்போதே, விதிமுறைகளை மீறி, குழந்தைகளைப் பயன்படுத்தியவர், விஜய். இன்று அவரது கட்சியினர், பள்ளிகள் வரை புதிய பரிணாமத்திற்கு இழுத்துச் சென்றுவிட்டார்கள்.

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைப் பின்னோக்கிப் பார்த்தால், அதற்கு முக்கியக் காரணமாக இருந்தது அரசியல் கட்சிகளுக்கிடையேயான நலத்திட்டப் போட்டியே தவிர, பள்ளிகளுக்குள் அரசியல் ஊடுருவல் அல்ல. பேருந்துப் பயண அட்டை, விலையில்லா மிதிவண்டிகள், மடிக்கணினிகள், ஊக்கத்தொகைகள், உயர்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள், தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் என கல்வியை வளர்க்கத்தான் ‘திராவிட மாடல் அரசு’ திட்டங்களைத் தீட்டியதே தவிர, கல்விக்கூடங்களுக்குள் புகுந்து கட்சியை வளர்க்கத் திட்டம் தீட்டவில்லை.

கல்வி நிலையங்கள் என்பவை அரசியல் செல்வாக்கை வளர்க்கும் மேடைகளோ அல்லது தலைவர்களைப் போற்றும் அரங்கங்களோ அல்ல. அவை அறிவை வளர்க்கும் கூடங்கள்; சிந்தனையைத் தூண்டும் இடங்கள்; எதிர்காலத் தலைமுறையை உருவாக்கும் சமூகப் பொறுப்புள்ள அமைப்புகள். அத்தகைய இடங்களில் அரசியல் முழக்கங்கள், தனிநபர் வழிபாடு அல்லது கட்சிசார்ந்த பிரச்சாரங்கள் நுழையத் தொடங்கினால், அவை கல்விச்சூழலின் அடிப்படை நோக்கத்தையே சிதைக்கும்.

கல்வி நிலையங்களின் கண்ணியம், மாணவர்களின் மனநலம் மற்றும் சுயசிந்தனை ஆகியவை எந்த அரசியல் ஆதாயத்தையும் விட மேலானவை. இதை ஆளுங்கட்சியான த.வெ.க. புரிந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்களும் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளும் இத்தகைய அபாயச் சூழலுக்கு இடம் தரும் போக்கை இனிவரும் காலங்களில் தடுக்க வேண்டும்.

---

## ஃப்ளாஷ்பேக்

### தலைவரைக் காண நேர்காணல்!



2011-ஆம் ஆண்டு நடைபெற இருந்த பொதுத் தேர்தலில், காஞ்சிபுரம் தொகுதிக்குப் போட்டியிட விருப்ப மனு அளித்திருந்தேன். நேர்காணலின்போது, இன்றைய கழகத் தலைவர் அவர்கள், என்னிடம் “உங்களுக்குச் சீட்டு கொடுத்தால் வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கும்?” எனக் கேட்டார். அதற்கு நான், “எனக்குச் சீட்டு வேண்டாம், தலைவர் கலைஞர் அவர்களை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆவலில், பணம் கட்டி உள்ளேன்” என்றேன். அப்போது அருகில் இருந்த கழகப் பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்கள், “உங்க தலைவரை நல்லா பாத்துக்கப்பா” என்று அவருக்கே உரித்தான பாணியில் நகைச்சுவையாக கூறினார். அதன்பின்னர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள சொன்னார், இன்றைய கழகத் தலைவர். இந்தப் படம் இன்றும் எங்கள் குடும்பத்தின் பொக்கிஷமாக உள்ளது. அந்த நினைவை இப்போது நினைத்தாலும் மனம் மகிழும்.



த.குமரன்

– த.குமரன், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்,
முன்னாள் வட்டக் கழகச் செயலாளர்,
காஞ்சிபுரம் மாநகரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## கருவூலம்

### கடன் தள்ளுபடியும் நிவாரணமும்...

1989-ஆம் ஆண்டு, கலைஞர் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குறுகிய கால பயிர்க் கடன்களின் தவணை தவறிய கடன்தொகைகள், மத்தியக்கால கடன்களின் அபராத வட்டிகள், நீண்டகால கடன்களின் மீதான ஒத்திவைக்கப்பட்டிருந்த வட்டி அனைத்தும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட்டது. கூட்டுறவு, வணிக, கிராமிய வங்கிகளிடமிருந்து கடன் பெற்றிருந்த சுமார் 19 லட்சம் விவசாயிகளுக்கு, 508 கோடி ரூபாய் முழுமையாக நிவாரணம் அறிவித்தார் கலைஞர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900